துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (31.12.2025) குறிஞ்சி முகாம் அலுவலகத்தில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறையின் சார்பில் செங்கல்பட்டு மாவட்டம், வண்டலூர் வட்டம் கீரப்பாக்கம் கிராமத்தில் 17.01 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சர்வதேச தரத்திலான டிராப் மற்றும் ஸ்கீட் துப்பாக்கிச் சுடுதல் பயிற்சி அகாடமி அமைக்கும் பணிக்கு காணொலி காட்சி வாயிலாக அடிக்கல் நாட்டினார். இந்நிகழ்வில் அமைச்சர்கள் தா.மோ. அன்பரசன், டி.ஆர்.பி. ராஜா, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (31.12.2025) குறிஞ்சி முகாம் அலுவலகத்தில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு துறையின் சார்பில் சென்னை ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கத்தில் 8.00 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயற்கை இழை ஓடுதளப் பாதை மறுசீரமைக்கும் பணியினை காணொலி காட்சி வாயிலாக தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில் இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், சட்டமன்ற உறுப்பினர் இ.பரந்தாமன், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (31.12.2025) குறிஞ்சி முகாம் அலுவலத்தில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறையின் சார்பில் சேலம் மாவட்ட பல்நோக்கு விளையாட்டு வளாகத்தில் 11.40 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய செயற்கை இழை ஓடுதள பாதை அமைக்கும் பணிக்கு காணொலி காட்சி வாயிலாக அடிக்கல் நாட்டினார். இந்நிகழ்வில் சுற்றுலாத் துறை அமைச்சர் இரா. ராஜேந்திரன், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (31.12.2025) குறிஞ்சி முகாம் அலுவலகத்தில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறையின் சார்பில் இராமநாதபுரம் மாவட்ட விளையாட்டு வளாகத்தில் 12.35 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய செயற்கை இழை ஓடுதளப் பாதை அமைக்கும் பணிக்கு அடிக்கல் நாட்டினார். இந்நிகழ்வில் வனம் மற்றும் கதர்த் துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன், சட்டமன்ற உறுப்பினர் காதர்பாட்சா முத்துராமலிங்கம், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி, மற்றும் உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (31.12.2025) சர்வதேச போட்டிகளில் பங்கேற்கும் வகையில் தயார் செய்வதற்காக தடகள வீரர்கள் ர.மானவ், ஜெ.ஆதர்ஷ் ராம், கூடைப்பந்தாட்ட வீரர் பி. ஃபியோடர் ஆதித்தன், குத்துச் சண்டை வீரர் பி.தர்ஷன், தடகள வீரர் யோபின், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய வாலிபால் வீராங்கனைகள் ம.ராகஸ்ரீ, பா. சாதனா ஆகியோருக்கு விளையாட்டு உபகரணங்கள் வாங்கிட தமிழ்நாடு சாம்பியன் அறக்கட்டளை நிதியிலிருந்து மொத்தம் 2,80,000/ ரூபாய்க்கான காசோலையை வழங்கினார். இந்நிகழ்வில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி, மற்றும் உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை, அண்மையில் ஐக்கிய அரபு எமிரேட்ஸில் நடைபெற்ற 7ஆவது ரோல் பால் உலகக் கோப்பை 2025போட்டியில் தங்கப்பதக்கம் வென்ற இந்திய ஆண்கள் மற்றும் பெண்கள் அணிகளில் இடம் பெற்ற வீரர் தீபக் ராஜா, வீராங்கனை எஸ்.எஸ்.மதுமிதா, பயிற்சியாளர் எஸ்.எஸ்.சுஸ்மிதா ஆகியோர் நேற்று (31.12.2025) சந்தித்து வாழ்த்துப் பெற்றனர். இந்நிகழ்வில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி, மற்றும் உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தேசிய அளவிலான போட்டிகளில் பதக்கங்கள் வென்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த சைக்கிளிங் வீரர் ச.பிரனேஷ்க்கு சர்வதேச அளவிலான போட்டிகளில் பங்கேற்க 7,55,000 ரூபாய் மதிப்பிலான அதிநவீன பந்தய சைக்கிளை நேற்று (31.12.2025) வழங்கினார். இந்நிகழ்வில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி, உடனிருந்தார்.

திருவள்ளூர் மாவட்டம் கடம்பத்தூர். ஒன்றியம் தண்டலம் ஊராட்சி பகுதியில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில் ரூ.17.20 கோடி மதிப்பீட்டில் கூவம் ஆற்றின் குறுக்கே கட்டப்படவுள்ள உயர்மட்ட மேம்பாலப் பணிகளை திருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி.ராஜேந்திரன் முன்னிலையில் மாவட்ட ஆட்சித் தலைவர் மு.பிரதாப் அடிக்கல் வைத்து துவக்கி வைத்தனர். உடன் திட்ட இயக்குநர் வை.ஜெயகுமார், நிர்வாகிகள் க.திராவிட பக்தன், ஆர்.டி.இ.ஆதிசேசன், க.அரிகிருஷ்ணன், மோ.ரமேஷ், பிரகாஷ் ஞானஒளி, கூளூர் எம்.ராஜேந்திரன், எஸ்.மகாலிங்கம், டி.மோதிலால், ஜெயபாரதி, பொன்.பாண்டியன், ராஜசேகர், பி.கே.நாகராஜ், காஞ்சிபடி சரவணன், கொப்பூர் திலீப், மற்றும் நிர்வாகிகள் அரசு அதிகாரிகள் உள்ளனர்.

## சென்னை கிழக்கு மாவட்டம்

# அம்பத்தூர் வடக்குப் பகுதியில் BLA 2, BDA, BYO ஆலோசனைக் கூட்டம்!

## அமைச்சர் – மாவட்டச் செயலாளர் பி.கே.சேகர்பாபு ஆலோசனை வழங்கினார்!

*சென்னை, ஜன.1- சென்னை கிழக்கு மாவட்டம், அம்பத்தூர் சட்டமன்றத் தொகுதி வடக்கு பகுதியில் சட்டமன்ற உறுப்பினரும் அம்பத்தூர் வடக்கு பகுதி செயலாளர் ஆன ஜோசப் சாமுவேல் தலைமையில் நேற்று மாலை 8.00 மணி அளவில் பி.எஸ்.பி கன் வென்ஷன் சென்ட்ரலில் நடைபெற்ற BLA2, BDA, BYO ஆலோசனைக் கூட்டத்தில் இந்து சமய அறநிலைத் துறை அமைச்சர் சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளர் பி.கே.சேகர் பாபுகலந்துகொண்டுஆலோசனைகள் வழங்கினார்.*

*குறிப்பாக 19.12.2025 அன்று தேர்தல் ஆணையத்தால் வெளியிடப்பட்ட அம்பத்தூர் தொகுதிக்கான வரைவு வாக்காளர் பட்டியல் சரி பார்த்தல் பணியில் BLA2, BDA, BLC ஆகியோருடன் இணைந்து கழகத்தினர் வீடு வீடாகச் சென்று வாக்காளர் பட்டியலை சரி பார்த்தும், வரைவு வாக்காளர் பட்டியலில் விடுபட்ட வாக்காளர்களையும், 18 வயது நிரம்பிய புதிய வாக்காளர் பெயர்களையும், புதிதாக இடம்பெயர்ந்த வாக்காளர்களின் பெயர்களையும் படிவம் 6ல் சேர்த்திடும் முக்கிய பணியிலும், பூத் வாரியாக ASD பட்டியலை சரிபார்த்து அதில் உண்மையாக உள்ள வாக்காளர்கள் பெயர் நீக்கப்பட்டிருந்தால் அவர்களது பெயர் மீண்டும் அந்த பூத் வாக்காளர் பட்டியலில் சேர்த்திடும் பணியில் முனைப்புடன் செயல்பட்டு ஜனவரி 3/12/25 மற்றும் 04/12/25 ஆகிய இரண்டு நாட்கள் இந்திய தேர்தல் ஆணையத்தால் இரண்டாம் கட்டமாக நடைபெறும் வாக்காளர் சேர்ப்பு முகாமில் சேர்க்க வேண்டும் என்று உரையாற்றினார்.*

*இந்த ஆலோசனைக் கூட்டத்தில் மண்டல குழு தலைவர், தலைமைச் செயற்குழு உறுப்பினர் பி.கே. மூர்த்தி, பகுதி கழகச் செயலாளர்கள் டி.எஸ்.பி.ராஜ கோபால், எம்.டி.ஆர். நாகராஜ், பி.முனியாண்டி, ஜி. சாந்தகுமாரி எம்.சி., நாகவள்ளி பிரபாகரன் எம்.சி, ஏ.பி.பூர்ணிமா எம்.சி., க.பொற்கொடி எம்.சி., உமா சந்தானம் எம்.சி, உஷா நாகராஜ் எம்.சி, வட்டக் கழக செயலாளர்கள் வி.ரவீந்திரன், பு.வீரா, வே.ராதாகிருஷ்ணன், மு.இரகு, த.கண்ணபிரான், எம்.கமல் மற்றும் கழக நிர்வாகிகள், முன்னோடிகள் செயல்வீரர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.*